1984 பிப்ரவரி 13]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, திருச்சி புத்தூர் பகுதியில் உத்தியோகத்தல் இருக்கிற அரிசனங்கள் கல்சரல் அசோசியேஷன் என்று வைத்துக்கொண்டு அதன் மூல மாக அவர்களுக்கு 5 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடம் நேரடியாகக் கொடுத்திருக்கிறார்கள். நானும் அந்தப் பகுதி மக்களோடு அமைச்சரிடம் அதுகுறித்துக் கேட்டுக் கொண்டேன். அமைச்சர் அவர்கள் அதுபற்றித் தகவல் கொடுக்கவில்லை. அந்த பைல் என்ன ஆனது? உததியோகத்தில் இருக்கும் அந்த அரிசனங்களுக்கு வீட்டுமனை கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி; உத்தியோகத்தில் இருக்கக் கூடியவர்கள் என்று அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள், அரசு வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற உணர்வோடுதான் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது. உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னை சந்தித்து சொல்லி இருந்தாலும் அரசு அதைத் தனியாக பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

ஆற்காட்டில் போபிகானா கட்டும் திட்டம்

74—

(* வினா எண் 19544—திரு. ஏ. எம். சேதுராமன்; மாண்புமிகு பிற்படுத்தோர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காட்டில் போபிகானா கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத் துறை கட்டுவதற்கு நிதியுதவி அளிக்கும் முறையில் சில மாற்றங்களைச் செய்து அரசு ஆணை பிறப்பித்து உள்ளது. அதன் அடிப்படையில் 50 ஆயிரம் மதிப்பீட்டில் ஆற்காடு நகராட்சியில் சலவைத் துறை கட்டி செயல்படுத்த முடியுமா என்று பிற்பட்டோர் நலத்துறை இயக்குநரிடம் சில விவரங்கள் கோரப்பட்டுள்ளன. விவரங்கள் கிடைத்தவுடன் ஆணை பிறப்பிக்கப்படும்.

75—

குளித்தலை காட்டுவாரியை அபிவிருத்தி செய்யும் திட்டம்.

* வினா எண் 14897—திரு இரா. கருப்பையா ; மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை காட்டுவாரி ஆண்டு தோறும் மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கெடுத்து விவசாயிகளுக்கு ஏற்படுத்தும் நஷ்டத்தைப் போக்க அதைச் சீர்திருத்தி அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?